திருக்களம்பூர் கோவிலில் உள்ள வாழை மரங்கள்.

* வினா எண். 125— திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் திருக்களம்பூர் கிராமத்தில் உள்ள கோவிலில் தண்ணீர் இல்லாமல் வளரும் வாழை மரங்களைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இத்திருக்கோவிலின் சிறப்புக்கும், புகழுக்கும் எவ்விதபங்கமும் ஏற்படாமல் தக்க முறையில் அங்குள்ள வாழைகளைப் பேணி பாதுகாக்க திருக் கோயில் செயல் அலுவலருக்கு அறநிலையத் துறை ஆணையரால் தக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Conveyance allowance of employees of Madras Corporation

*126. *Q.* **Thiru K. Suppu :** Will the Hon. the Minister for Local Administration be pleased ro state—

(*a*) whether it is a fact that the conveyance allowance granted to the Corporation employees in Madras has been stopped and the amount already given is being recovered : and

(*b*) If so, the reasons therefor ?

திரு. கா. காளிமுத்து : (அ) வாகனப்படி முழுவதும் நிறுத் தப்படவில்லை. மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர்படி ரூ. 75/- வீதமும் பெறுகின்றனர். உயர்த்தப்பட்ட 60 சதவிகிதம் தான் 1-12-73 முதல் நிறுத்தப்பட்டது. அதற்குமுன்பு வழங்கப்பட்ட கூடுதல் தொகை திரும்ப பிடிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வாகனப்படி 60 சதவிகிதமாக உயர்த்தப்பட்ட பின்பு மாநகராட்சி அலுவலர்களின்படி அரசு அலுவலர் பெறுவதைவிட மிகக் கூடுதலாக இருந்தது. ஒரே அளவில் வாகனப்படி இருக்க வேண்டுமென அரசு கருதியது.